## தொழில் நிலை

ஒழுங்கானதும் முழுமையானதுமான தரவு கிடைக்கப் பெறுமை, இலங்கையில் தொழில் மாற்றங்களை பகுப்பாய்வதற்கு பெரும் குறைபாடாக அமைகிறது இப் பகுப்பாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள முக்கிய மாறிலிகளானவை மொத்த தொழிற்படை தொழிலிலுள்ளோர், தொழிலற்றோர், எண்ணிக்கை போன்றவையும் தொடர்ச்சியற்ற இடைவெளிகளில் நடாத்தப்பட்ட குடிமதிப்பு, மாதிரி அளவைகளிலிருந்து பெறப்பட்ட தரவுகளையும் அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகளேயாகும்.

1971 இல் குடிமதிப்பு 45 இலட்சம் ஆட்களைக் கொண்ட தொழிற்படையை குறிக்கிறது. இது சனத்தொகையின் 35 சதவீதத்தை உள்ளடக்கியதாகும். 1973 இல் மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட நுகர்வோர் நிதி அளவையின் படி தொழிற்படையின் மதிப்பீடு இவ் எண்தொகையிலும பார்க்க சிறிதளவு உயர்ந்ததாகும். 1978 இன் மத்திய வங்கி நுகர்வோர் நிதி, சமூக - பொருளாதார அளவையின் கிடைக்கப்பெற்ற தொடக்கத் தரவு 57 இலட்சம் கொண்ட தொழிற்படையைக் காட்டியது. இது 1979 இல் மதிப்பிடப்பட்ட சனத்தொகையில் 39 சதவீதமாகும்.

குடிமதிப்புத் தரவுகள் 1971 இல் தொழிலற்றோர், 839,246 ஆட்கள் எனக் காட்டுகிறது. நுகர்வோர் நிதி அளவை மதிப்பீட்டின்படி தொடர்பான எண்தொகை 10 இலட்சமாகும். நுகர்வோர் நிதி சமூக பொருளாதார அளவையின் முதற் சுற்றின் தொடக்கத்தரவின்படி 1978 இல் தொழிலற்றோர் 874,000 ஆகும். இது தொழிலின்மையின் 13 சதவீதம் வீழ்ச்சியடைந்ததைக் காட்டுகிறது. இவை தொடர்பாக அண்மைக் காலத்தரவுகளை 1973 ஆம் ஆண்டின் நுகர்வோர் நிதி அளவீட்டின் விளைவுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரபபட்டுள்ளது.

அட்டவணை 1.13

தொழிற்படையின் சதவீதமாக தொழிலின்மை

| துறை | 1973 | 1978 |
|---|---|---|
| நகரம் ... | 32.1 | 21.2 |
| கிராமம் ... | 24.5 | 15.4 |
| பெருந்தோட்டம் ... | 12.0 | 5.4 |
| நாடு முழுவதும் ... | 24.0 | 15.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மேற்கூறப்பட்டுள்ள தரவினை விளக்குவதில் காணப்படும முக்கிய குறைபாடு யாதெனின் அளவைகள் இரு வேறுபட்ட காலங்களை உள்ளடக்கியிருந்தமையாகும். 1978 – 79 அளவை 1978 இன் இறுதிக் காலாண்டில் நாடத்தப்டிருக்கையில் 1973 ஆம் ஆண்டின் அளவை 1973 ஆம் ஆண்டின் முதல் இரு மாதங்களில் நடாத்தப்பட்டுள்ளது. இக்குறைபாட்டிற்கு உட்பட்டு, நாட்டின் தொழிலின்மை, 1973 இல் தொழில் படையின் 24.0 சதவீதத்திலிருந்து 1978 இல் 15 சதவீகத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதெனத் தென்படுகின்றது.

1973 இல் ஏற்கனவே ஆகக்குறைவாகக் இருந்த பெருந்தோட்டத் துறையின் தொழிலின்மை பெருமளவு வீழ்ச்சியை காட்டி, 1978 இல் தொழிற்படை 5 . 4 சத வீதத்தை அடைந்தது. கிராமியத் துறையின் தொழிலின்மை, நகரத் துறையிலும் பார்க்கத் தொடர்ந்தும குறைவாக இருந்து, 1973இன் 24.0 சத வீதத்திலிருந்து 1978 இல் 15. சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நகரத் துறையில் தொழிலின்மை 32 சதவீதத்திலிருந்து 21 சதவீதத்திற்கு வீழ்ச்சி யடைந்திருந்த போதிலும் அதன் தாக்கம் மிகுந்திருந்தது.

தொழிலின்மையின் மாவட்ட அடிப்படையிலான பகுபாய்வு பிரதேச மாதிரி அமைப்பைக் குறிக்கிறது. மிக உயர்ந்த தொழிலின்மை வீதம் தென் மேற்கு கரைப் பகுதியிலேயே இருந்தது. கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் தொழிலின்மை வீதங் கள் 14க்கும் 21 சதவீதத்திற்கும் இடையில் காணப்பட்டது. கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களைக் கொண்ட நாட்டின் மத்திய பிரதே சங்களே ஏனைய உயர்ந்தவீத தொழிலின்மை நிலைமையைக் கொண்டவையா கும். இவற்றுடன் ஒப்பிடுகையில் நுவரெலியா, பதுளை போன்ற உயர்ந்த அளவு தேயிலைப் பயிர்ச்செய்கை இடங்கள் குறைந்த தொழிலின்மை வீதத் தைக் கொண்டவையாகக் காணப்பட்டன. வரண்டவலய பகுதி (அனுராத புரம், மொனறாகலை, வவுனியா) ஆகக் குறைந்தபட்ச தொழிலின்மை வீதத் தைக் கொண்டவையாகக் காணப்பட்டது.

அட்டவணை 1.14

**மாவட்ட அடிப்படையில் தொழிலின்மை — 1978**

| மாவட்டம் | தொழிற்படையில் சதவீத மான தொழிலின்மை | மாவட்டம் | தொழிற்படையில் சதவீத் மான தொழிலின்மை |
|---|---|---|---|
| கொழும்பு ... | 20.2 | மன்னார் ... | வி. இ. |
| களுத்துறை ... | 17.0 | வவுனியா ... | 4.3 |
| காலி ... | 21.2 | திருகோணமலை ... | 11.9 |
| மாத்தறை ... | 20.1 | மட்டக்களப்பு ... | வி. இ. |
| அம்பாந்தோட்டை .. | 18.8 | கண்டி ... | 15.0 |
| மொனராகலை ... | 4.8 | மாத்தளை ... | 12.9 |
| அம்பாறை ... | வி. இ. | நுவரேலியா ... | 9.3 |
| பொலனறுவை ... | வி. இ. | பதுளை ... | 9.4 |
| அனுராதபுரம் ... | 3.9 | இரத்தினபுரி ... | 11,0 |
| புத்தளம் ... | 9.5 | கேகாலை ... | 21.7 |
| யாழ்ப்பாணம் ... | 10.8 | குருநாகல் ... | 13.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* 1978 சூறாவளி காரணமாக தரவு சேகரிக்கப்பட முடியவில்லை.

கல்வி வகையான பகுப்பு இடைநிலைக் கல்வியுடையோர்களிடையில் (அதா வது இடைநிலைக் கல்வி, க. பொ. த. (சா தரம்) சித்தியடைந்தோர், க. பொ. த. (உயர்தரம்) சித்தியடைந்தோர்) தொழில் இன்மை மிக அதிகமாக இருந் தது என்பதைக் குறிக்கிறது உயர்நிலைக் கல்வியுடையோரிடையில் தொழி லின்மை (பட்டப்படிப்பில் சித்தியடைந்தோர்) மிகக் குறைவாக இருந்தது இப் பகுப்பு கடந்த 5 ஆண்டு காலப் பகுதியில் தொழிலின்மையில் மிக முக்கியமான வீழ்ச்சியைக் (80 சதவீதம்) காட்டியுள்ளது.

## அட்டவணை 1.15

### கல்வி வகையான தொழிலின்மைப் பகுப்பு

| கல்வி வகை | தொழிற்படையின் சதவீதமாக தொழிலின்மை | |
|---|---|---|
| | 1974 | 1978 |
| பள்ளிக்கூடம் செல்லாதோர் ... | 7.9 | 4.0 |
| தொடக்கம் ... | 14.1 | 7.2 |
| இடைநிலை ... | 37.1 | 21.9 |
| க. பொ. த. (சா. த) ... | 47.4 | 29.2 |
| க. பொ. த. (உ. த) ... | 44.4 | 31.7 |
| சித்தி ... | 16.2 | 3.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பெண்களிடையே தொழிலின்மை ஆண்களிலும் பார்க்க மிகக் கூடுதலாக இருந்தது என்பதை அளவைத் தரவு காட்டுகிறது. இது 1973இல் இருந்த துடன் ஒப்பிடுகையில் 1978இல் மேலும் அதிகரித்து காணப்பட்டது. ஆண்கள் விடயத்தில், தொழில்படையின் தொழிலின்மை வீதம் 1973 இன் 18.9 சதவீதத்திலிருந்து 1978இல் 9.6 சதவீதத்திற்கு துரித வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. பெண்கள் விடயத்தில் வீதம் 36.4 சதவீதத்திலிருந்து 25.6 சத வீதத்திற்கு மாத்திரமே வீழ்ச்சியடைந்தது. வயது வகையான பகுப்பிலும் தொழிலின்மை 19-25 ஆண்டு (25 சவீதம்) வயதுத் தொகுதியிலேயே மிக உயர்வாக இருக்கையில் 46-55 ஆண்டு (0.8%) வயதுத் தொகுதியில் மிகக் குறைவாக இருந்தது எனினும் 14-25 ஆண்டு வயதுத் தொகுதியில் தொழி லின்மை வீதம் வீழ்ச்சியையடைந்தது.

## அட்டவணை 1.16

### வயது வகையான தொழிலின்மைப் பகுப்பு

| வயது தொகுதி ஆண்டுகள் | தொழிற்படையின் சதவீதமாக தொழிலின்மை | |
|---|---|---|
| | 1973 | 1978 |
| 14 – 18 | 65.8 | 23.6 |
| 19 – 25 | 41.5 | 24.9 |
| 26 – 35 | 15.2 | 11.5 |
| 36 – 45 | 3.9 | 4.1 |
| 46 – 55 | 1.2 | 0.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அரச துறையில் தொழில் நிலைபற்றிய மத்திய வங்கியின் ஆண்டு அளவையின்படி, அரசத் திணைக்களங்களில் தொழில்நிலை 1979இல் 33,713 இனால் அல்லது 5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்பில் 39 சதவீதம் கீழ்நிலை ஊழியர் தரங்களிலும், 29 சதவீதம் ஆசிரியத் தொழிலிலும் 24 சதவீதம் சிற்றூழியர் தரங்களிலும் இருந்தன. அரச சார்புள்ள நிறுவனங்களில் (அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சபைகளும்) தொழில்நிலை 89,385 அல்லது 14 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதில் 83 சதவீதம் சிற்றூழியர் தரங்களிலும் 14 சதவீதம் கீழ்நிலை ஊழியர் தரங்களிலும் இருந்தது. அரசதுறை பெருந்தோட்டங்களில் தொழில்நிலை 61,000 அல்லது 3 சதவீத குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு இருந்தது. அரச சார்புத்துறையில் தொழில் நிலை மூன்றில் இரண்டு பங்கு அதிகரிப்பு அரச பெருந்தோட்டங்களில் ஏற்பட்டுள்ளது.

நிறுவனமயமாக்கப்பட்ட தனியார் துறை தொழில் நிலையின் ஆண்டு மாற்றங்களை அளவிட பதிலீடாக பயன்படுத்தப்பட்ட ஊழியர் சேமநிதியத்திலுள்ள பணத் தொழிற்படும் கணக்குகளின் எண்ணிக்கை 1979இல் 102,479 ஆல் அல்லது 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்பதைக் காட்டுகின்றது. நிதிக்குச் செலுத்து தொகையளிக்கும் அரச சார்பு நிறுவனங்களின் தொழிநிலை அதிகரிப்பைக் கழித்தால், 1979இல் தனியார் துறை தொழில் நிலையின் தேறிய அதிகரிப்பு 22,525 என மதிப்பிடலாம்.

முந்திய பந்தியில் தரப்பட்டுள்ள தரவு அரச திணைக்களங்கள், அரசுசார்பு நிறுவனங்கள், நிறுவனமயப்படுத்தப்பட்ட தனியார்துறை போன்றவற்றில் தொழில் நிலையின் அதிகரிப்பு 1978இன் 145,000 இற்கு எதிராக 1979இல் 136,000ஆக இருந்தது என்பதைக் காட்டுகிறது. எனினும் இவ் வெண்தொகை தரவு கிடைக்கப்பெறுமையால் நிறுவனச்சார்பற்ற துறை, உள்ளூர் வேளாண்மைத் துறை என்பவற்றில் தொழில் நிலையில் ஏற்பட்ட ஆக்கத்தை உள்ளடக்காது.

கிடைக்கப்பெறும் தரவு 1979இல் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெருமளவு வேலை தேடிச்செல்லும் இலங்கையர்களின் வெளியேற்றத்தில் அதிகரிப்பு இருந்தது என்பதை குறிக்கிறது. பயிற்றப்பட்டோரின் வெளியேற்றம் உள்ளூரில் கிடைக்கப்பெறும் பயிற்றிப்பட்டோர்களின் எண்ணிக்கையில் குறைவினை ஏற்படுத்துமாதலால், கல்வித்துறை அதிகாரிகள் கல்லூரிகள் தரத்திலேயே பெரும் பயிற்சித் திட்டத்தை மேற்கொள்ளல் வேண்டும். இத்தகைய வேலைகளில் ஏனைய நாடுகளின் அனுபவம், வெளிநாடு சென்ற தொழிலாளர்கள் மீண்டும் வரும் பொழுது சமூக பொருளாதார பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதைக் காட்டியுள்ளது. எதிர்காலத்தில் இத்தொழிலாளர்களை உள்நாட்டில் உற்பத்தித்திறன் மிக்க தொழில்களில் மீள அமர்த்துவது பற்றி கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

## வெளிநாட்டு வர்த்தகம்

இலங்கையின் வர்த்தக நிலுவை (சுங்கத்தரவுகளின்அடிப்படையில்) 1978ஆம் ஆண்டின் ரூ, 14,800 இலட்சம் (சி.எ உ. 1000இலட்சம்)கொண்ட குறையினைத் தொடர்ந்து 1979இல் ரூ 72,870 இலட்சம் (சி.எ.உ 3,620 இலட்சம்)கொண்ட குறையினைப் பதிவுசெய்தது. சில அரச முகவர் நிலையங்கள் ஏற்றுமதி இறக்குமதிகளைக் காலம் கடந்து பதிவு செய்வதால் இவற்றிற்கு ஏற்ப சுங்கத்தரவுகளைக்